தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 31-3-2017

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மலை வாழ் மக்களுக்கு நஞ்சில்லா பயிர் பாதுகாப்பு தொழில்நுட்பத்திறன் மேம்பாட்டு பயிற்சி

கோவை மாவட்டத்தில் உள்ள பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத்தை சார்ந்த சேம்புக்கரை மற்றும் துமனூர் கிராமத்தில் வாழும் மழை வாழ் மக்களுக்கு நஞ்சில்லா பயிர் பாதுகாப்பு தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டு பயிற்சி 28-3-2017 அன்று வழங்கப்பட்டது.

இந்த ஒரு நாள் பயிற்சியில் அறுபது (60) மலைவாழ் மக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இந்த பயிற்சி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் பயிர் பாதுகாப்பு மையத்தின் அங்கமான பூச்சியியல் துறையின் மூலம் நடத்தப்பட்டது. இந்த பயிற்சியில் மானாவாரி பயிர்கள் சாகுபடிக்கு ஏற்ற சோளம், தட்டைப் பயறு, விதைகள், வீட்டுத் தோட்டத்திற்கு ஏற்ற அவரை, வெண்டை, கீரை விதைகள், தீவன பயிர்கள் கோ எப் எஸ் 29 விதை மற்றும் கம்பு நேப்பியர் கரணை, சப்போட்டா பழ மரக்கன்று போன்றவை இலவசமாக வழங்கப்பட்டது. மேலும் இப்பயிற்சியில் மானாவாரி பயிர்கள் சாகுபடியில் நன்மை செய்யும் நுண்ணுயிரிகள் கொண்ட இடு பொருட்கள், உயிர் உரங்கள் அசோஸ்பைரில்லம் (1 கிலோ), பாஸ்போ பாக்டீரியா (1 கிலோ), வறட்சியை தாங்கும் சிவப்பு மீதைலோ பாக்டீரியா (500 மிலி), பயிர் வளர்ச்சி ஊக்கியான பஞ்சகாவ்யா (1 லிட்டர்) பயறு ஊக்கி (500 கிராம்), பிவேரியா பேசியானா பூச்சிக் கொல்லி (250 கி), டிரைகேடர்மா விரிடி நோய்க் கொல்லி (1 கிலோ) வேம்பு சார்ந்த தாவர பூச்சிக்கொல்லி (100 மிலி) மற்றும் மஞ்சள் நிற ஒட்டும் பொறி இலவசமாக வழங்கப்பட்டது.

இந்த பயிற்சியில் பூச்சியியல் பேராசிரியர் முனைவர்.சீ.ஸ்ரீதரன் திட்டத்தின் முக்கிய நோக்கம் மற்றும் பயிற்சியை சார்ந்த நஞ்சில்லா பயிர் பாதுகாப்பிற்கு உகந்த வேம்பு சார்ந்த தாவர பூச்சிக்கொல்லி மற்றும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் பிவோரியா பேசியானா வெள்ளை பூசணத்தின் பயன்பாடு குறித்த தொழில் நுட்பத்தை விளக்கினார். இதனை தொடர்ந்து முனைவர் பெ.அ.சரவணன், உதவி பேராசிரியர் நன்மை செய்யும் ஒட்டுண்ணிகள், இரைவிழுங்கிகள் மற்றும்

மஞ்சள் நிற ஒட்டுப்பொறியின் பயன்பாடு குறித்த தொழில் நுட்பங்களை விளக்கினார். தொடர்ந்து திருமதி. வசந்தி ஞானசேகர், தோட்டக்கலை உதவி இயக்குநர் பொறுப்பு, பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம் அவர்கள் சப்போட்டா பழ மர சாகுபடி குறித்தும் புதிய சொட்டுநீர் பாசன திட்டங்கள் பற்றியும் விளக்கினார். பின்னர் வயல் வெளியில் ஒட்டுண்ணி மற்றும் இரைவிழுங்கி பரப்புதல் பற்றிய செயல் விளக்கம் நடத்தப்பட்டது. இப்பயிற்சிக்கு வருகை புரிந்த மலைவாழ் மக்களை திரு.பி.சேகர், தோட்டக்கலை அலுவலர் வரவேற்றார். இறுதியாக முனைவர்.பெ.அ.சரவணன், உதவி பேராசிரியர் நன்றியுரை வழங்கினார். பங்கு பெற்ற அனைவருக்கும் தேநீர் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது. இந்த பயிற்சிக்கு தேவையான நிதி உதவியை இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம், புது டெல்லி, வழங்கியது.

மக்கள் தொடர்பு அலுவலர்